# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

## போட்டிக்கான பிரிவும், வயதெல்லையும், போட்டிகளும்.

| பிரிவு | ஆண்டு | போட்டிகள் |
|---|---|---|
| பிரிவு ~ 1 | 2019 (6 வயது) | மனனப்போட்டி, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 2 | 2018 (7வயது) | விவிலியவினாவிடை, மனனப்போட்டி, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 3 | 2017 (8 வயது) | விவிலியவினாவிடை, மனனப்போட்டி, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 4 | 2016 (9 வயது) | விவிலியவினாவிடை, மனனப்போட்டி, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 5 | 2015 (10 வயது) | விவிலியவினாவிடை, மனனப்போட்டி, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 6 | 2014 (11 வயது) | விவிலியவினாவிடை, பேச்சுப்போட்டி, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 7 | 2013 (12 வயது) | விவிலியவினாவிடை, பேச்சுப்போட்டி, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 8 | 2012 (13 வயது) | விவிலிய வினாவிடை, பேச்சு, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 9 | 2011 (14 வயது) | விவிலிய வினாவிடை, பேச்சு, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 10 | 2010 (15 வயது) | விவிலிய வினாவிடை, பேச்சு, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 11 | 2009 (16 வயது) | விவிலிய வினாவிடை, பேச்சு, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 12 | 2008 (17 வயது) | விவிலிய வினாவிடை, பேச்சு, பாடல், ஓவியம். |
| பிரிவு ~ 13 | 2007ம் அதற்கு முன் பிறந்தவர்களும் | விவிலிய வினாவிடை, பேச்சு, பாடல், ஓவியம். |

**17 வயதுக்கு மேற்பட்ட எவரும் பிரிவு ~13 க்கான போட்டிகளில் பங்கேற்கலாம். அவர்களுக்கான மதிப்பீடு தனியாக கணிக்கப்படும்.**

**அன்பான பெற்றோரே, மறையாசிரியர்களே, பிள்ளைகளே!**
இறை இயேசுவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்தக்கள்.
மீண்டும் ஒரு **ஆன்மீக அறிவுப் போட்டி-2025** வழியாக உங்களைச் சந்திக்கின்றோம்.

கடந்த பல ஆண்டுகளாக உங்கள் பிள்ளைகளை ஆன்மிக அறிவுப் பேட்டிகளுக்காக பொறுப்புணர்வுடனும், மிகுந்த சிரமத்தோடும், நல் ஆர்வத்தோடும் பயிற்றுவித்து வருகின்ற உங்களுக்கு எமது பாராட்டுக்கள். இவ்வாண்டிற்கான மறையறிவுப் போட்டிகளிலும் அதே ஆர்வத்துடன பிள்ளைகள் பங்கேற்பதை ஊக்குவியுங்கள். மாணவர்களின் ஆன்மீக அறிவு வளத்தை மேம்படுத்தும் நோக்குடன் இப்போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

# போட்டிக்கான விளக்கங்களும், விதிமுறைகளும்

**போட்டிக்கான விளக்கங்களும், விதிமுறைகளும்.**

## ❖ விவிலிய வினாவிடைப் போட்டிகள் :-

விவிலிய வினாவிடைப் போட்டிக்கான வினாத்தாள்கள் பின்வரும் அமைப்பையுடையதாக இருக்கும்.

- பிரிவு 2-5வரையுள்ள பிள்ளைகள் கொடுக்கப்படும் மூன்று அல்லது நான்கு விடைகளில் மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுதல்.
- பிரிவு 6-9வரையுள்ள பிள்ளைகள் கொடுக்கப்படும் மூன்று அல்லது நான்கு விடைகளில் மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுதல் முறையிலும் பிள்ளைகளே கேள்விகளுக்கு சரியான விடைகளை எழுதுதல் முறையிலும் வினாத்தாள் அமைவுறும்.
- பிரிவு 10-13 வரையுள்ள பிள்ளைகள் கொடுக்கப்படும் கேள்விகளுக்கு சரியான விடைகளை எழுதுதல் முறையில் மட்டுமே வினாத்தாள் அமைவுறும்.
- அனைத்து பிரிவுகளிலும் இங்கு தரப்படாத ஆன்மீகம் சார்ந்த ஒரு சில வினாக்களும் (அண்மைய இறை ஒளி பத்திரிகையிலிருந்து வினாக்கள்) கேள்வித்தாளில் இடம்பெறும்.

**❖ மனனப்போட்டி :-** பிரிவு 1 -5 வரை மனனப் போட்டி நடைபெறும்.
மனப்பாடம் செய்யும் திறன், தமிழ் மொழி உச்சரிப்பு, தொனி, பாவம் ஆகியன கவனத்தில் கொள்ளப்படும்

## பேச்சுப்போட்டி :-

- எல்லாப் பிரிவு மாணவர்களும், அந்தந்தப் பிரிவுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளை மனப்பாடம் செய்து பேச்சுக்குரிய முறையில் சமர்ப்பிக்க ( பேச) வேண்டும்.
- அவற்றை சரளமாக தெளிவாக பேச்சாற்றலோடு ஒப்புவிப்பதன் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

## ❖ ஓவியப் போட்டி :-

- பிரிவு 1 - பிரிவு 7 வரை ஓவியப்போட்டிக்கான நிழற்படபிரதிகள் போட்டியின் போது தரப்படும். அவற்றை அழகுற பொருத்தமானவகையில் வர்ணம் தீட்ட வேண்டும்.
- பிரிவு 8 - பிரிவு 13 வரையுள்ள பிள்ளைகள் கொடுக்கப்படும் தலைப்பிலே சுயமாகவே ஓவியம் வரைந்து வர்ணம் தீட்ட வேண்டும்.
- இப்பிரிவுகளுக்குட்பட்ட பிள்ளைகள் வரைந்து பழகுவதற்கென தலைப்புகள் உரிய பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ளதை கவனத்தில் கொள்ளவும். வர்ணம் தீட்டுவதற்கான பொருட்களை மாணவர்களே கொண்டு வருதல் வேண்டும்.

## ❖ பாடல் போட்டி :-

- ஒவ்வொரு பிரிவுக்கும் கொடுக்கப்பட்ட பாடல்களை பக்க வாத்தியங்களின்றிப் பாடவேண்டும்.
- எல்லாப் போட்டிகளின் முடிவுகளையும் தீர்மானிப்பது நடுவர் குழுவையே சாரும்.

போட்டிகளில் பங்குபற்றுவோரின் பெயர், பிறந்த திகதி, பங்குபற்றும் பிரிவு, பங்குபற்றும் போட்டிகள் போன்ற விபரங்களை விண்ணப்பப் படிவத்தில் தெளிவாக நிரப்பி எமக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

போட்டிகள் அனைத்தும் **18.10.2025 சனிக்கிழமை காலை 08.30 மணிக்கு** ஒல்ரனில் நடைபெறும். அதற்கு முன்னதாக அதாவது **30.09.2025** ற்கு முன்னதாக மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான பதிவுப் படிவத்தை முழுமையாகவும், சரியாகவும் நிரப்பி எமக்கு அனுப்பி வைக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கடித உறையின் மேல்பக்கத்தில் "**மறை அறிவுப் போட்டிகள் 2025**" எனக் குறிப்பிடவும்.

**அனுப்பவேண்டிய முகவரி :**

**Pfr.A. J. Muralitharan,**

**Jurastrasse 9, 4600 Olten.**